**கவனிக்க.-** *2016.10.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1990 - 2016 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2016.10.21

*1990 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1922* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1922* | ஏல விற்பனைகள் | *1929* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *ஒதுக்கீடு (திருத்தம்) சட்டமூலம் 2016, யூலை மாதம் 15ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் 2016, யூலை மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி சட்டமூலம் 2016,ஒகத்து மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2016, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016,ஒற்றோபர் மாதம் 28ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்

பகிரங்க ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத வாகனங்களும், வள்ளங்களும், எஞ்சினும் எதிர்வரும் 2016.10.28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

| பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| 1. சிறிய வாகனம்- மகேந்திரா மக்சிமோ | 01 |
| 2. முச்சக்கர வண்டி - பஜாஜ் | 01 |
| 3. எப்.ஆர்.பி.போட் | 01 |
| 4. டீசல் இஞ்சின் (போட்டுக்குரியது) | 01 |
| 5. எப். ஆர்.பி. வள்ளம் | 01 |

நிபந்தனைகள்.-

1. ஏல விற்பனைகள் ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட பொருட்களை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றப் பதிவாளர் அவர்களின் அனுமதியுடன் பொது மக்கள் பார்வையிட முடியும்.

2. ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

3. ஏலத்தில் விற்கப்படும் மேற்படி பொருட்களை ஏலத்தில் பெறுபவர் உடனடியாகக் காசு மூலம் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

4. காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மா. இளஞ்செழியன்,
மேல்நீதிமன்ற நீதிபதி,

மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

10- 485

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : டெராஃபார்மா இன்வெஸ்ட்மண்ட்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 116459
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016. 09. 15
பதிவு முகவரி : இல.319/2, ஹைலெவல் வீதி, கொழும்பு 05

சபைக் கட்டளைப் பிரகாரம்,

கோர்பரேட் சர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

10-510

## அறிவித்தல்

இலங்கை, காலி, வலகந்துாவ, யக்கஹ, வினீதா, இல. 421/1 எனும் முகவரியைக் கொண்ட சுனெத்ரு லங்கா (பிறைவேட்) லிமிட்டட் என்னும் கம்பனி , கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பதிவு இல.பீவீ 116165 என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

செயலாளர்.

10- 515

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின் படி சிசார இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட் ஆனது 2016, யூலை 20 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.:-

கம்பனியின் பெயர் : சிசார இன்டர்நெஷனல் (பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 115111
பதிவு அலுவலகம்: எம்பிஏ டயஸ் கட்டிடம், இல. 147, வைத்திய சாலை வீதி, கொழும்பு 01

திரு. எஸ். லோகநாதன்,
செயலாளர்.

இல. 2C,
ஹில்டா பிளேஸ்,
தெஹிவளை.

10- 547

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* பிவுசர் ஓல்டனேடிவ் எனர்ஜீஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீ வீ 116485
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2016.09.15
*பதிவு முகவரி :* இல. 72/76 ஏ, எதிரிசிங்க வீதி, மிரிஹான, நுகேகொடை

*கம்பனியின் பெயர் :* குளோபல் சோலா பவர் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீ வீ 116364
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2016.09.09
*பதிவு முகவரி :* இல. 72/76 ஏ, எதிரிசிங்க வீதி, மிரிஹான, நுகேகொடை

*கம்பனியின் பெயர் :* கிரீன் வேல்ட் ஜப்பான் கம்பனி (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீ வீ 116231
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2016.09.05
*பதிவு முகவரி :* இல. 41, உதயகிரி, வதாகட, பொல்கஹவெல

ஆர். கே.எல்.எஸ். கோபரேட்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்

10-667

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* ரொடிண்டன் கெபிடல் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 116066
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.09.21
*முகவரி :* இல. 75/14, ரூரல் டிவலப்மண்ட் வீதி, பொல்வத்த, தெபானகம, பன்னிப்பிட்டி

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

டீ. எஸ். டி. மிரிஹான
கம்பனிச் செயலாளர்.

10- 671

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* டெமரிண்ட் குளோபல் சர்விசஸ் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 116490
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.09.19
*பதிவு முகவரி :* இல. 342, காலி வீதி, கொழும்பு 03

டெமரிண்ட் குளோபல் சர்விசஸ்
லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பணிப்பாளர்.

10- 898

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* நொவுஸ்டெக் ட்ரான்செக்ட் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 116679
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.09.23
*பதிவு முகவரி :* 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10, இலங்கை

சபையின் கட்டளைப் பிரகாரம்,

எப். ஜே. என்ட் ஜீ.டீ.சேரம்,
சட்டத்தரணி.

10- 899

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ் குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* இசுறு வெ பார்மா (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம் :* பீவீ 100583
*பதிவு முகவரி :* இல. 64, ரஜ மாவத்தை, ரத்மலானை

பணிப்பாளர்.

10- 1056

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* டி.ஏ.ஆர்.வேர்ல்ட் வைட் கம்பனி (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 115563
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.08.05

*பதிவு முகவரி : இல. 59, கிறகரீஸ் வீதி, கொழும்பு 07*

*சபைக் கட்டளைப் பிரகாரம்,*

*பி.ஆர். செக்ரெடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட், பணிப்பாளர்.*

*10-1089*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பெயர் : யுனிக் ஃபுட் ப்றொபெசனல்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்*
*பதிவு இலக்கம்: பீவீ 116528*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.09.20*
*பதிவு முகவரி : இல. 53/பீ I, வாதுரகும்புற வீதி, கிரிபத்கும்புற, கண்டி*

*கம்பனிச் செயலாளர்கள்.*

*10- 1094*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : ஜுலி கன்ஸ்ட்ரக்சன் (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 115402*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 118/57, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை*

*ராமசுந்தரம் றொபட் பெரிலமின், கம்பனிப் பணிப்பாளர்.*

*10- 1122*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : அன்னபூர்ண பூட்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 115500*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 367, கண்டி வீதி, கிளிநொச்சி*

*பொன்னையா ராகவன், கம்பனிப் பணிப்பாளர்.*

*10- 1123*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : யாழ் இன்டஸ்ரீஸ் (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 115496*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 60, குமரன் ரட்னம் வீதி, கொழும்பு 02*

*ரட்னராஜா நவரட்னம், கம்பனிப் பணிப்பாளர்.*

*10- 1124*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.:-*

*கம்பனியின் பெயர் : கானேஷன்ஸ் டெக்ஸ்டைல் (பிறைவெட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 115873*
*பதிவு முகவரி : இல. 128, பி-வீ , கெயிசர் வீதி, கொழும்பு 11*

*டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட், செயலாளர்கள்.*

*10- 1141*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 08ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.:-*

*கம்பனியின் பெயர் : எல் டபிள்யூ ப்ரொஜெக்ட் மெனேஜர்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 116341*
*பதிவு முகவரி : இல. 26, 3 ஆவது ஒழுங்கை, கோவில் வீதிக்கு அப்பால், ஏக்கல, ஜா-எல*

*டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட், செயலாளர்கள்.*

*10- 1142*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.:-*

*கம்பனியின் பெயர் :* குவான்டம் லேபல்ஸ் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 114544
*பதிவு முகவரி :* இல. 2 ஏ, 1/1, ரஞ்சன் வீதி, ஓவ் ஸ்டேசன் வீதி, கொழும்பு 6

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் மற்றும்
செக்கரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

10- 1143

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.:-

*கம்பனியின் பெயர் :* எஸ்டர் ஸ்மார்ட் இன்டர்நெஷனல் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 114682
*பதிவு முகவரி :* இல. 15, 1ஆம் மாடி, விசாக்கா வீதி, கொழும்பு 04

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ்
மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

10- 1144

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு யூலை மாதம் 08ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.:-

*கம்பனியின் பெயர் :* என்.எஸ்.கே. டிரேடிங் கம்பனி கொமொடிடி (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 114919
*பதிவு முகவரி :* இல. 120, 1 ஆம் மாடி, 4 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 11

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ்
மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

10- 1145

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.:-

*கம்பனியின் பெயர் :* இ கிறீன் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 116099
*பதிவு முகவரி :* இல. 115, 3/1, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு 6

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் மற்றும்
செக்கரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

10- 1146

---

### கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்:-

*கம்பனியின் பழைய பெயர் :* இக்விட் சேர்விசஸ் லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீபீ 601
*கம்பனி பதிவு செய்யப்பட்ட முகவரி :* த "வெவர்ட்ரீ", இல.141/9, வெக்சோல் வீதி, கொழும்பு 2
*கம்பனியின் புதிய பெயர்:* எம்.ஏ.சி. இக்விட் மெரிடைம் சேர்விசஸ் லிமிட்டட்
*பெயர் மாற்றப்பட்ட திகதி :* 2016.08.15

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

இல.45, பிரேபுறூக் ஸ்ட்ரீட்,
கொழும்பு 02,
2016.09.26.

9-1162

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், 2016ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20ஆம் திகதி கீழ்க் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.:-

*கம்பனியின் பெயர் :* டிஜிடல் ரியலிடி (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 116546
*பதிவு அலுவலகம்:* இல.752/1, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 9

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்டேரியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3 ஆம் மாடி,
இல.11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

10- 1175

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : ரொக்ஹில்ஸ் கம்பனி (பிறைவெட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 112079
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.02.24
பதிவு முகவரி : இல. 49/1, இரண்டாம் செபல் ஒழுங்கை, வெள்ளவத்தை

கம்பனிச் செயலாளர்.

10- 1180

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், கொஹுவல, ஃபீல்ட் அவினியூ, இலக்கம் 07 இல் வதியும் மில்லனியகே சதுரிகா தில்ஹானி பீரிஸ் ( தே.அ.அ.இல. 796901721 V) ஆகிய எனக்கு, முன்னர் இலங்கைச் சனநாயக சோசலிசன் குடியரசின் பொரலஸ்கமுவ, திவுலப்பிட்டிய, இலக்கம் 94 என்ற முகவரியில் வசித்து, தற்போது ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, 10310, நியூயோர்க், ஸ்டேடன் ஐலண்ட், போடைன் ஸ்ரீட், 107 என்ற முகவரியில் வதியும் ஹெணேகம இல்லேகொல்லே ஹசித சிறிவர்தண( தே.அ.அ.இல. 721932230 V) என்பவர் அற்றோணித்தத்துவகாரராக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மேற்படி முகவரியிலேயே 2016, ஒகத்து மாதம் அத்தாட்சிப்படுத்திய, அற்றோணி உரித்தாளராக எனக்கு வழங்கப்பட்ட, இலங்கைப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் மேல் மாகாண வலய அலுவலகத்தில் எழுத்து மூல உரித்துடமை மற்றும் அற்றோணித்தத்துவ ஆவணத்தில் 187 ஆம் தொகுதி, 7 ஆம் பக்கம், 4879 ஆம் இலக்க நாட்புத்தகத்தின் கீழ் 2016.08.22 அன்று பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித்தத்துவத்தினால் வழங்கப்பட்ட அற்றோணி உரித்துடைமை இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டதாக அனைத்துலகத்திற்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

மில்லனியகே சதுரிகா தில்ஹாணி பீரிஸ்,
(அற்றோணித்தத்துவதாரர்).

2016, ஒகத்து 29.

10- 450

---

## விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள இல. 174/5, மயான வீதி, நற்பிட்டிமுனை-03, கல்முனை எனும் முகவரியில் தற்போது வசித்துவரும் storgata 170, 9008, Toromso, Norwayஐச் சேர்ந்த கந்தையா பிள்ளை ஜெயகலா (தே.அ.அ.இல.665131530 V) என்பவரினால் கல்முனையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம்.கே. பேரின்பராஜா என்பவர் முன்பு 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1422 ஆம் இலக்க விசேட அற்றோணித்தத்துவப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்காக எனது உண்மையானதும் சட்டரீதியுமான அற்றோணித்தத்துவக்காரராக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இல. 172, மயான வீதி, நற்பிட்டிமுனை- 03 ஐச் சேர்ந்த திருமதி வண்ணாச்சி பத்திரநாலகே றொகான் சஞ்சீவ (தே.அ.அ.இல. 771912281 V) என்பவரை நியமித்திருந்தேன்.

மேற்குறித்த விசேட அற்றோணித்தத்துவம் கிழக்கு வலய பதிவாளர் நாயகம் திணைக்களத்தில், 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி பதிவேட்டு இலக்கம் 20 இல் முதலாம் பக்கத்தில் தொடர் இலக்கம் 415 இல் பதிவு செய்யப்பட்டுள்ளதும் ( Under Serial No. 415 in Folio No. 01 in the Volume No.20) மேற்குறித்த விசேட அற்றோணித்தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டதால் இத்தால் குறித்த அற்றோணித்தத்துவமானது 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லா தொழிக்கப்படுகின்றது என்பதனை நான் பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மேற்குறிப்பிட்ட விசேட அற்றோணித்தத்துவகாரராகிய திருமதி வண்ணாச்சி பத்திரநாலகே றொகான் சஞ்சீவ என்பவரால் மேற்குறிப்பிடும் திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் மற்றும் எக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

கந்தையா பிள்ளை ஜெயகலா.

10- 512

---

## விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள இல. 174/5, மயான வீதி, நற்பிட்டிமுனை-03, கல்முனை எனும் முகவரியில் தற்போது வசித்துவரும் storgata 170, 9008, Toromso, Norwayஐச் சேர்ந்த கந்தையா பிள்ளை ஜெயகலா (தே.அ.அ.இல.665131530 V) என்பவரினால் கல்முனையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம்.கே. பேரின்பராஜா என்பவர் முன்பு 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1421 ஆம் இலக்க விசேட அற்றோணித்தத்துவப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்காக எனது உண்மையானதும் சட்ட ரீதியுமான அற்றோணித்தத்துவக்காரராக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இல. 172, மயான வீதி, நற்பிட்டிமுனை- 03 ஐச் சேர்ந்த திருமதி வண்ணாச்சி பத்திரநாலகே நிலூசா றொசானி (தே.அ.அ.இல. 816811147 V) என்பவரை நியமித்திருந்தேன்.

மேற்குறித்த விசேட அற்றோணித்தத்துவம் கிழக்கு வலய பதிவாளர் நாயகம் திணைக்களத்தில், 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி பதிவேட்டு இலக்கம் 20 இல் முதலாம் பக்கத்தில் தொடர் இலக்கம் 414 இல் பதிவு செய்யப்பட்டுள்ளதும் ( Under Serial No. 414 in Folio No. 01 in the Volume No.20) மேற்குறித்த விசேட அற்றோணித்தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டதால் இத்தால் குறித்த விசேட அற்றோணித் தத்துவமானது 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லா தொழிக்கப்படுகின்றது என்பதனை நான் பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மேற்குறிப்பிட்ட விசேட அற்றோணித்தத்துவக்காரராகிய திருமதி வண்ணாச்சி பத்திரநாலகேநிலுசா றொசானி என்பவரால் மேற்குறிப்பிடும் திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் மற்றும் எக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

கந்தையா பிள்ளை ஜெயகலா.

10- 513

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 08, மன்னிங் நகர வீடமைப்புத் திட்டம் BR/2/11 ஆம் இலக்கத்தில் வதியும் வஹல தந்திரிகே பத்மா சமரசிங்க( தேசிய அடையாள அட்டை இல. 425550659 V) ஆகிய நான், குறித்த குடியரசில் கொஸ்கம பஹல கொஸ்கம கந்துகொட வீதி, 351 ஆம் இலக்கத்தில் வதியும் அபேசிங்க்க முதியன்செலாகே அருண தேசப்பிரிய( தேசிய அடையாள அட்டை இல. 721002543 V) அவர்களுக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. குலநந்தனி அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, திசெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட 3230 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தின் மூலம் அதில் குறிப்பிட்ட விடயங்களுக்கு எனது உண்மையான மற்றும் சட்டரீதியான அற்றோணித்தத்த்துவக்காரராக செயற்படும்படி நான் வழங்கிய நியமனத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் மற்றும் இல்லாது ஒழிக்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து குறித்த அபேசிங்க முதியன்சேலாகே அருண தேசப்பிரிய அவர்களின் செயல் அல்லது அவரின் செயற்பாடுகளுக்கு நான் பொறுப்பாளியில்லையென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

வஹல தந்திரிகே பத்மா சமரசிங்க.

கொழும்பு,
2016, செத்தெம்பர் 28.

10- 609

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பன்னிப்பிட்டிய, வனாத்தவத்த, ஹோகந்தர பாதை, 1228/ஏ என்ற இலக்கத்தைச் சேர்ந்த வாசல தந்திரிகே டிலானி டில்ருக்ஷி அன்னா பெரேரா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எச். எம். பி.பீ. ஹீன்கெந்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2015, நவெம்பர் 11 ஆந் திகதி மற்றும் 7895 என்ற இலக்கத்தையுமுடையதும் இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசைச் சேர்ந்த பன்னிப்பிட்டிய, வனாத்தவத்த ஹோகந்தர பாதை,1228/ஏ என்ற இலக்கத்தைச் சேர்ந்த திரு. வாசல தத்திரிகே நிஹால் அன்ரனி பெரேரா என்பவரை மேற்கூறப்பட அற்றோணித் தத்துவத்தின் மூலமாக எனது அற்றோணியாக நியமனம் செய்து குறிக்கப்பட்ட விடயங்களை செயற்படுத்துமாறு மேற்கொள்ளப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளேன் எனவும் , திகதியிடப்பட்ட இன்றிலிருந்து மேற்கூறப்பட்ட வாசல தந்திரிகே திஹால் அன்ரனி பெரேரா என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடு அல்லது செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பல்ல என்பதை இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வாசல தந்திரிகே டிலானி டில்ருக்ஷி அன்னா பெரேரா.

2016, செத்தெம்பர் 30.

10- 610

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பன்னிப்பிட்டிய, வனாத்தவத்த, ஹோகந்தர பாதை, 1228/ஏ என்ற இலக்கத்தைச் சேர்ந்த வாசல தந்திரிகே டிலானி டில்ருக்ஷி அன்னா பெரேரா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எச். எம். பி.பீ. ஹீன்கெந்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2012, ஓகத்து 23 ஆந் திகதி மற்றும் 7183 என்ற இலக்கத்தையுமுடையதும் இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசைச் சேர்ந்த பன்னிப்பிட்டிய, வனாத்தவத்த ஹோகந்தர பாதை,1228/ஏ என்ற இலக்கத்தைச் சேர்ந்த திரு. வாசல தத்திரிகே நிஹால் அன்ரனி பெரேரா என்பவரை மேற்கூறப்பட அற்றோணித் தத்துவத்தின் மூலமாக எனது அற்றோணியாக நியமனம் செய்து குறிக்கப்பட்ட விடயங்களை செயற்படுத்துமாறு மேற்கொள்ளப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளேன் எனவும் திகதியிடப்பட்ட இன்றிலிருந்து மேற்கூறப்பட்ட வாசல தந்திரிகே நிஹால் அன்ரனி பெரேரா என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடு அல்லது செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பல்ல என்பதை இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வாசல தந்திரிகே டிலானி டில்ருக்ஷி அன்னா பெரேரா.

2016, செத்தெம்பர் 30.

10- 611

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, நூபே, அநகாரிக்க தர்மபால மாவத்தை, இலக்கம் 272 இல் வதியும் தஸன்த சந்திம குணசேகர ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு மனோஜ் பெரேராவினால் 2011, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 04 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினால் எனது அற்றோணி உரித்தாளராக களுத்துறை, கட்டுக்குருந்த ஸ்ரீ தர்மாராம மாவத்தை, 60 ஆம் இலக்கத்தில் வதியும் கப்பினி தேகிரி ரஷ்மி நிலூஷா மென்டிஸ் செனவிரத்ன எனப்படும் கப்பினி தேகிரி ரஷ்மி நிலூஷா குணசேகர என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி 4 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தை தஸந்த சந்திம குணசேகர ஆகிய நான் இது முதற் கொண்டு இரத்துச் செய்வதாகவும் அது இனிமேல் செயலிழக்கப்பட்ட ஒரு அற்றோணித்தத்துவமாக அறிவிக்கப் படுகின்றது.

10- 952

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

"சேனானி", இமதுவ வீதி, அஹன்கம மற்றும் இல. 528/7ஏ, சபுகஸ்கந்த வீதி, கோனவல எனும் முகவரியில் ( தற்போது ஹோரன்டாரியோ வீதி, மிஸ்ஸிசோகா, ஓ என், எல் 5 பீ 0பீ9, கனடா)குடியிருக்கும் அகுரெஸ்ஸ ஆசாரிகே சுசந்த தீபபிரிய ஆகிய நான், இல. 263சீ/1, கலஉட வீதி, கொதலாவல, கடுவெல எனும் முகவரியில் குடியிருக்கும் மஹரம்ப வல்பிட கமகே இந்திக என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு கே. சுமிந்த பெரேரா அவர்களால் 2015.09.03 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இல. 27 என்ற அற்றோணித்தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாசையின் பேரிலும் 2016.08.26 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்கின்றேன். இதன் பின்னர் மேற்படி நபரால் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக்கூற மாட்டேன் என இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும், அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் தருகின்றேன்.

அகுரெஸ்ஸ ஆசாரிகே சுசந்த தீபபிரிய.

10- 976

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

செலான் வங்கி பீஎல்சீ
கம்பனி பதிவு இலக்கம் PQ 9
செலான் டவர்ஸ், 90, காலி வீதி, கொழும்பு 03

செலான் வங்கி பீஎல்சீயின் (வங்கி) பணிப்பாளர்கள் சபை வங்கியினால் நிறைவேற்றப்பட்ட, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு வீ.ஏ. பரணகமவால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 68 ஐ உடைய 2014, யூன் 11 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு நீக்கப்பட்டு 2015, திசெம்பர் 9 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது பற்றி பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தலை வழங்குகிறது.

செலான் வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

(திருமதி) என்.என்.நஜுமுதீன்,
கம்பனிச் செயலாளர்.

10- 1111

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கடுகன்னாவ, கொடபோகொட, இல. 198 இல் வசிக்கும் க்லோரியா சவுன் தரதேவி என்கின்ற தேவி பிரேமதிலக( தே.அ.அ.இல. 567333205 V) ஆகிய நான், பிரபல பத்திரத்துறைப்பதிவாளரான திரு. A.A. பஷீர் அஹமட் மூலம் எழுத்து உத்தரவாத இல. 4214 மற்றும் 2008 ஆம் ஆண்டு தை மாதம் 29 ஆந் திகதி என் அற்றோணி அதிகாரமுடையவரான ஜோன் லலித் நிரன்ஜன் சூரியபண்டார ஆகியவருக்கு நியமிக்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன். அவ் அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மீது என்னைப் பொறுத்தவரை இனிமேல் இவரால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் என் மூலம் பொறுப்புத் தெரிவிக்கப்பட மாட்டாது என்பதை மேற்கோளிட்டு சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

10- 1135

---

## திருத்தம்

2016.10.14 ஆந் திகதிய 1989 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி I: தொகுதி II ( ஆ) வில் பிரசுரிக்கப்பட்ட 10- 222 ஆம் இலக்க அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், விடுக்கப்படும் அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : அயன்வூட் இன்வெஸ்ட்மண்ட் ஹோல்டிங் டூ (பிறைவெட்) லிமிட்டட்
கம்பனி இல .: பீவி 116527
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016, செத்தெம்பர் 20
பதிவு அலுவலகம்: இல.116, ஹெவ்லொக் ரோட், கொழும்பு 05

பணிப்பாளர்.

10- 1824

# ஏல விற்பனைகள்

## பகிரங்க ஏல விற்பனை

கல்கிஸ்ஸை மாவட்ட நீதிமன்றம்

இக்னேசஸ் டயஸ் நாணயக்கார,
இல. 95, கலபொடவத்தை,
நிவுன்கம, கெஸ்பேவ

வழக்காளி

வழக்கு இல.:223/97/பிரிவிடல்

-எதிர்-

1. சைமன் தியடொர் சிறியானந்த டயஸ் நாணயக்கார
2. மில்ரெட் மேரி அன்ஜலிகா டயஸ் நாணயக்கார
3. ரீட்டா பிரிஜட் சிறியானி டயஸ் நாணயக்கார
4. தெரெஸ் ஜராங்கனி மல்கின்தி டயஸ் நாணயக்கார
5. வின்னிபிரடா டொன் டயஸ் நாணயக்கார
6. பிரிதி டயஸ் நாணயக்கார
அனைவரும் : A/3/10
த சொய்சா அடுக்குமனை,
கட்டுபெத்த, மொரட்டுவை
7. ஜயிஸ்நூர் மஹரூப்

இல.47/1, பிரியதர்சனாராம வீதி,
தெஹிவளை

எதிராளிகள்

2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி கல்கிஸ்ஸை மேலதிக மாவட்ட நீதிபதி பி. டபிள்யூ. ஜயதிலக்க முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்காளியும், வழக்காளி சார்பில் திருமதி சோபா சமரதுங்க அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய சட்டத்தரணி கஜநாயக அவர்கள் தோன்றியிருக்கும்போது 7 ஆவது எதிராளி சார்பில் திருமதி சம்பா டி சொய்சா அவர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய சட்டத்தரணி எச்.ஜீ. ஹுசைனும், 1 இலிருந்து 6 வரையிலான எதிராளிகள் சார்பில் மஹேந்திர டயஸ் அவர்கள் தோன்றியிருக்கும்போது இங்கு கீழே குறிப்பிடப்படும் கட்டளையிடப்பட்டு தீர்வு வழங்கப்பட்டதோடு இத் தீர்வுக்கு எதிராக 7 ஆவது எதிராளியால் WP/ HCCA/ M123/ Fஆம் இலக்க மேன்முறையீடும் உயர்நீதிமன்றத்தின் Sc/ HCCA/ LA 150/ 2012 ஆம் இலக்க உயர் நீதிமன்ற மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டும் 2002, ஏப்பிறல் 25 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பு நிலைநிறுத்தப்பட்டது என இத்தால் கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுவதால், அதற்கமைய இரு தரப்பாலும் முன்வைக்கப்பட்ட சாட்சிகளை பரிசீலனை செய்து திருப்தியடைந்து மன்று கீழே இடாப்பில் விபரிக்கப்படும் மேல் மாகாண கொழும்பு மாவட்ட சல்பிட்டி கோரளை பள்ளேபத்து தெஹிவளை, நெதிமாலை, கல்வல வீதியில் அமைந்துள்ள வரிப்பணம் இல. 254/ 2 ஆம் இலக்க 'மீகஹவத்த' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ் .டி எதிரிவிக்ரம அவர்களால் 1999.04.24 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 1221 ஆம் இலக்க ஆரம்ப படத்திற்கு அமைய உத்தேச விடய பொருள் இங்கு கீழே குறிப்பிட்டபடி பிரிவிட்டு வழங்கப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வழக்காளிக்கு பிரிவிடா 1/8 உம் 1 ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/ 8 உம், 2 ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/ 8 உம், 3 ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/8 உம்,4 ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/8 உம்,5ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/8 உம், 6 ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/8 உம், 7 ஆவது எதிராளிக்கு பிரிவிடா 1/8 உம் மற்றும் அனைத்து பயிர் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலத்தின் உரிமைகள் உரித்தாக்கப்படவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டி ருப்பதால் விடயப்பொருளின் விசாலத்திற்கமைய, தரப்புகளுக் கிடையே பிரிவிடுவது நடைமுறைச் சாத்தியம் இல்லாதபடியால் பிரிவிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இக்காணியை விற்று, விற்ற பணத்தை தரப்புகளின் பங்குரித்திற்கு அமைய வழங்க கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதால் நிலஅளவையாளர் கட்டணம் மற்றும் வழக்குச் செலவு தரப்புகளுக்கு உரிமையாகும் பங்கின் விசாலத்திற்கு அமைய விகிதாசார கட்டணம் உரித்தாகும் என மேலும் கட்டளையிட்டப்பட்டு தீர்ப்பு வழங்கப் பட்டிருப்பதால் அக்கட்டளைப்படி மன்றால் அனுமதிக்கப்பட்ட விற்பனை நிபந்தனை முறைமைகளை அங்கீகரித்ததன் பின் அவை அமைந்திருக்கும் இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படவேண்டும் என கட்டளையிடப்பட்டு தீர்வு வழங்கப்பட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் கீழே இடாப்பில் விபரிக்கப்படும் அசையா ஆதனமான 11பேர்ச். விஸ்தீரணங்கொண்ட 'மீகஹவத்த' என அழைக்கப்படும் நெதிமாலே ,கல்வல வீதியில் 254/2 என்ற வரிப்பண இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு. 2016 ஆம் ஆண்டு நவெம்பர் 17 ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு காணி அமைந்துள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்.**- காலி வீதியில் தெஹிவளை சந்தியிலிருந்து ஹில் வீதியில் 1.5கி.மீ. அளவில் முன் சென்ற பின் வீதியில் இடப்பக்கம் உள்ள கல்வல வீதி (கல்விகாரை வீதி) யைச் சந்திக்கலாம். அவ் வீதியில் ஏறத்தாள 150 மீற்றர்கள் சென்று இடப்பக்கம் திரும்பியதும் 15 அடி அகல பொது வீதி (கல் பதிக்கப்பட்ட) யைச் சந்திப்பீர்கள், அவ்வீதியில் 30 மீற்றரளவில் சென்று வலது பக்கத்தில் (வீதியில் வலப்பக்கத்தில்) இக் காணி அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

1. கொள்வனவு விலையில் 25%;
2. ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
3. முழு விளம்பரச் செலவு;
4. முத்திரைக் கட்டணம்;
5. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம்;
6. பிரதேச சபைக் கட்டணம் 1%;
7. நொத்தாரிசுக் கட்டணம்;
8. உள்ளூராட்சி மன்ற வரி;
9. விற்பனை விலையில் முதலாவது 75,00ரூபா வுக்கு 150 ரூபாவும் அதன்பின்னுள்ள ஒவ்வொரு 1,000 ரூபாவுக்கு 5% மன்றுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் (கம்ப கட்டணம்) மிகுதி 75% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கல்கிஸ்ஸை மாவட்ட நீதிமன்றில்

இலக்கம் 223/7 பிரிவிடல் என்னும் வழக்கில் வைப்பு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் முன்பு செலுத்தப்பட்ட பணம் திருப்பி வழங்கப்பட மாட்டாது. அத்துடன் ஆதனம் மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

நீதிமன்றின் கட்டளைப்படி,

அஜித் தசாநாயக்க,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
மதிப்பீட்டாளர்.

விசாரணை மற்றும் சம்பந்தப்பட்ட உறுதிகளை பரிசீலனை செய்யும் பொருட்டு அழையுங்கள் : தொலைபேசி இல. 072-1802348, 077-5741312

மின்னஞ்சல்: ajith.dasanayake@yahoo.com

10-439

---

## செலான் வங்கி பீஎல்சீ - கொழும்பு கோட்டைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

### ஏல விற்பனை

''கடன்பட்டோர் என்ற வகையில் கொழும்பில் பதிவு இல. WA/85378 ஐக் கொண்ட மெசர்ஸ் கவித்தி இம்போட்ஸ் என்ட் எக்ஸ்போட் என்ற பெயர் வடிவில் உள்ள நிறுவனத்தின் கீழ் பங்குதாரர்களாக வியாபரத்தை நடத்தி வருகின்ற ஹோகந்தயைச் சேர்ந்த டிலான் டில்ருக் வீரசேகர மற்றும் இம்புல்கொடவைச் சேர்ந்த மாதும ஆராச்சிகே டொன் ஜிஹான் புத்திக குணதிலக்க என்பவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ எல் சீக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள இரண்டு தொடர்ந்துள்ள சொத்துக்கள்.

